# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C. 115/2025 | Date | : 06.03.2026 |
| Deposition of Witness for | : அ.சா.6 | Taluk | : |
| Name | : மணி | Calling | : சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| Father / Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 06.03.2026

**(எதிரிகள் 1 முதல் 3 நீதிமன்றத்தில் ஆஜரானார்கள்.)**

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1. நான் தற்போது மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.11.2024 ம் தேதி மதியம் 15.30 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது சேலம் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற காயத்தகவலின் பெயரில் திரு.வெங்கடாசலம் தலைமை காவலர் (1210) என்பவரை அனுப்பி ரங்கநாதன் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலையம் ஆஜராகி கடந்த 31.10.2024 ம் தேதி பகல் சுமார் 03.00 மணிக்கு நடந்த சம்பவம் தொடர்பாக குற்ற எண். 330/2024 ஆக சட்டபிரிவுகள் 296(b), 118(1), 115(2) பி.என்.எஸ். ஆக வழக்கு பதிவு செய்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கையை வாதியின் புகார் வாக்குமூலத்துடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.2, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி

வைத்தேன். (**புகார் அ.சா.ஆ.5 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)

2. பின்னர் கடந்த 01.11.2024ம் தேதி மாலை 16.30 மணிக்கு சாட்சிகள் ராஜா, சிவம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பின்னர் கண்ணுற்ற சாட்சிகள் தேவராஜ், சக்திவேல் ஆகியோரைத் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3.** எதிரிகள் மூவரையும் 05.11.2024ம் தேதி காலை 11.00 மணியளவில் கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். மேற்படி சம்பவத்தில் காயம்பட்ட ரங்கநாதன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.அருண் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி ரங்கநாதன் என்பவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியுள்ளார். **(வாதியின் விபத்து காயப்பதிவேடு மற்றும் மருத்துவர் வழங்கிய காயச் சான்று முறையே அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**4.** இத்துடன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது கடந்த 27.12.2024ம் தேதி, சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 115(2) பி.என்.எஸ்.–வின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

மேற்படி வழக்கில் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், பொய் புகார் பெற்று சரிவர புலன் விசாரணை செய்யாமல் இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

Witness

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D. Sivakumar

Judicial Magistrate No.II,
Sankari.